# P.S. SENIOR SECONDARY SCHOOL, MYLAPORE

# CLASS WORK

# II LANGUAGE - TAMIL

வகுப்பு : 10
கனிச்சாறு( தொகுதி-1) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தமிழ்த் தேசியத் தந்தை என்று அறியப்படுபவர்.20ஆம் நூற்றாண்டில்தமிழ்ப் பல்துறை அறிஞர்களுள் முதன்மையானவராகக் கருதப்படுபவர்.தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படும் மறைமலையடிகளார், மொழிஞாயிறு பாவாணர்ஆகியோரின் கொள்கை உலகெங்கிலும் உள்ள தமிழர்களிடம் பரவக் காரணமாக விளங்கியவர்.

பிறந்த இடம் : சேலம், பிறப்பு ;1933 மார்ச் 10

பெற்றோர்- துரைசாமி,குஞ்சம்மாள்

இறப்பு 1995ஜூன்11.

இவரது இயற்பெயர் துரை மாணிக்கம். தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகமெங்கும் பரப்பியவர். உலகியல் நூறு, பாவியக் கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.இவரது திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது.

வினா

தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

1. பழமைக்கும் பழமையாய் கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தோன்றிய செழுந்தமிழ்.

2.பாண்டிய மன்னனின் மகளாய் எண்ணி வளர்க்கப்பட்டவள்.

3.திருக்குறளின் பெருமைக்குரியவள்; எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களால் தன் பெருமையை நிலைநாட்டியவள்.

4. பழம்பெருமையும் - தனக்கெனத்தனிச்சிறப்பும்-இலக்கிய வளமும் -வியக்கத்தக்க நீண்ட நிலைத்த தன்மையும் தமிழ் மொழிக்கு இருப்பதால் வேற்று மொழியார் போற்றிப் புகழ்கின்றனர்.

5. இந்தப் புகழுரைகள் பற்றுணர்வை எழுப்புகிள்றன.

ஆகவே வண்டானது செந்தாமரைத் தேனைக்குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று தமிழ் மொழியைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள தமிழன்னையின் பெருமையைக் கூறி வாழ்த்துவதாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.

குறிப்பு; தமிழ் நோட்டில் எழுதவும்

மொழித்திறன் வினாக்கள்

1. மொழியின் சிறப்பினைக் கூறும் கவிதைகளுள் ஏதேனும் ஒன்றினைப் பத்து வரிகளுக்குள் மிகாமல் எழுதுக(கட்டுரை நோட்டில்)

2.நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர்வகைகளின் வளர்ச்சி நிலைகள் குறித்து எழுதுக (கட்டுரை நோட்டில்)